

# உங்களையே நீங்கள் மாற்றுவது எப்படி?

## HOW TO CHANGE YOURSELF?

P.C. பிலேமோன் ராஜா
ஆசிரியர் – கிருபையுள்ள வார்த்தை

வாசகர்கள் அனைவருக்கும் எனது குடும்பத்தின் சார்பாகவும், கிருபையுள்ள வார்த்தை பத்திரிக்கையின் சார்பாகவும் ஆசீர்வாதமான **'புத்தாண்டு 2013'** வாழ்த்துக்களை தெரிவிப்பதில் மிகவும் அகமகிழ்கிறேன். இந்த புதிய ஆண்டு முழுவதும் தேவ சமாதானமும், அருளும், ஆசீர்வாதமும் உங்களோடும், உங்கள் குடும்பத்தோடும், முயற்சிகளோடும் உபாகமம் 5:10ன் படி நிலைநிற்கும்படி ஜெபிக்கிறேன்.

***"என்னிடத்தில்(கர்த்தர்) அன்பு கூர்ந்து, என் கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களுக்கோ ஆயிரம் தலைமுறை மட்டும் இரக்கஞ்செய்கிறவராயிருக்கிறேன்".***

கடந்த ஆண்டைப் போலவே இவ்வாண்டும் நமது பத்திரிக்கை, உங்கள் ஆவிக்குரிய வாழ்வை வளப்பெடுத்தும் என நம்புகிறேன். தேவனுடைய வார்த்தையை, செய்திகளை வாசித்து தங்கள் வாழ்வில் மாற்றம் பெற ஏங்கும் இன்னும் அநேகரும் நம்முடைய பத்திரிக்கையை பெற்றுக்கொள்ளும்படியாக இவ்வூழியத்தை தாங்குங்கள். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக!

**உங்களையே நீங்கள் மாற்றுவது எப்படி?**

***சுய உதவி மற்றும் சுயஅபி விருத்திக்கான திருமறையின்படி வழிகாட்டுதல்.***

ஒருவர் கிறிஸ்தவராவதற்கு 'மாற்றம்' அவசியம். நாம் பழைய பழக்கவழக்கங்களை எடுத்துவிட்டு, புதிய பழக்கங்களை சேர்த்துக்கொள்ள வேண்டும். இந்த செய்தியானது, வேதாகம கொள்கைகளைக் கொண்டு நம்மை நாமே முன்னேற்றிக் கொள்ள உதவும். அதாவது விசுவாசம், அன்பு, மனந்திரும்புதல், வேதத்தை ஆராய்தல், ஜெபித்தல், சோதனைகளை தவிர்த்தல் மற்றும் பொறுமை போன்ற வேதாகமக் கொள்கைகள். தேவனுடைய வார்த்தையே சுய உதவிக்கான சிறந்த வழிகாட்டியும், சுய முன்னேற்றத்திற்கான உந்து சக்தியுமாகும்.

**அறிமுகம் :**

***உங்களுடைய ஏதாவது பழக்கத்தை மாற்ற உங்களுக்கு சிரமமாக இருந்துள்ளதா?*** மனிதர்கள் அனைவருமே பழக்கங்களின் உருவாக்கம். நாம் கடந்த காலத்தில்

எப்படி நடந்து வந்துள்ளோமோ அப்படியே இனியும் நடக்க முற்படுகின்றோம். ஒரு பள்ளத்தாக்கிலே நதி கடந்து போவதைப் போல, ஒரு பழக்கம் நெடுநாள் தொடருமானால்; அது அப்படியே ஊறிப்போய், மாற்றுவதற்கு கடினமாகும். இது நல்ல பழக்கமானாலும் சரி, தீய பழக்கமானாலும் சரி இரண்டிற்கும் பொருந்தும். எபே 4:22-24 வசனங்கள், நாம் தேவனை சேவிக்கும்படி மனம் மாறுவோமானால் அதற்கு மிகப்பெரிய மாற்றங்கள் தேவை. பழைய பழக்கங்களும், மனோபாவங்களும் புதியவைகளினால் மாற்றப்பட வேண்டும். ஆதலால், கிறிஸ்தவர்களாகிய நாம் நல்ல பழக்கங்களாகிய வேத ஆராய்ச்சி, ஜெபம், அன்பு, விசுவாசம், பொறுமை, திருச்சபை கூடுகைகளில் பங்கு பெறுவது, ஊழியத்திற்கு கொடுப்பது மற்றும் பிறருக்கு வசனத்தை போதிப்பது போன்றவற்றை வளர்த்துக்கொள்ள வேண்டும். மேலும் நாம் கெட்ட வார்த்தைகள், கட்டுபடுத்த முடியாத கோபம், சூதாடுதல், போதைப்பொருட்களை பயன்படுத்துதல், புகைப்பிடித்தல், மதுபானம் குடித்தல், புறம்கூறுதல், பொய் சொல்லுதல், காம விகார ஒழுக்கமில்லா செயல்கள் போன்ற தீய பழக்கங்களை களைய (நீக்க) வேண்டும்.

நம் வாழ்க்கையில் எதையெல்லாம் மாற்ற வேண்டும் என தெரிந்து கொள்வது மட்டும் போதாது. அதோடுகூட, அந்த மாற்றத்தை எப்படி செயல்படுத்துவது என தெரிய வேண்டும்.

மாற்றம் என்பது எளிமையாக வந்துவிடாது. வேத வசனங்கள் நமக்கு எல்லா நற்செயல்களைப் பற்றியும் போதிப்பதால் (2 தீமோ 3:16,17), நமக்கு தேவையான (இந்த மாற்றத்திற்கு தேவையான) எல்லா வழிகாட்டுதலையும் அது தருகிறது. ஆகவே சுய உதவி வழிகாட்டுதல் மற்றும் சுய முன்னேற்றத்திற்கான உந்து சக்தி ஆகியவற்றிற்கு ஒரு சிறந்த ஊற்றாக தேவனுடைய வார்த்தை உள்ளது. தேவனுடைய விருப்பத்தின்படி நம்மை நாமே மாற்றிக் கொண்டு முன்னேற்ற சில நடைமுறை வழிகள்...

***முயற்சி 1 : உங்கள் வாழ்வின் நோக்கம்/குறிக்கோளை மாற்றுங்கள் :***

எந்த ஒரு மனிதருமே செயல்படுவதற்கு முன், அவர் உந்தப்பட (Motivated) வேண்டும். ஒருவர் நன்றாக ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கிறார் என்று வைத்துக் கொள்வோம். அந்த உறக்கத்தில் இருந்து அவர் இடையிலேயே எழும்ப காரணம் எதுவாக இருக்கும்? அது, ஒருவேளை அவர் வழக்கமாக இரவில் பல் துளக்குவதை மறந்து அது இடையில் நினைவில் வருவதினால் இருக்காது ; மாறாக, தன்னுடைய வீடு தீப்பிடிப்பதினாலேயே அவர் அந்த ஆழ்ந்த உறக்கத்தை களைவார்.

அதைப்போலவே கிறிஸ்தவர்களுக்கும் மாற்றத்திற்கான உறுதியான உந்து சக்திகள் உள்ளன. அவைகளில் சிலவற்றை சிந்திப்போம்.

### 1. தேவனிடம் அன்பு மற்றும் அற்பணிப்பு:

ரோமர் 12:1,2 – தங்கள் மனதை புதுப்பிப்பதினால் கிறிஸ்தவர்கள் மாற்றம் பெறுகின்றனர் (எபே 4:23). வித்தியாசமாக வாழவிரும்பினால் நாம் வித்தியாசமாக சிந்திக்க வேண்டும். நாம் இந்த உலகத்தைப்போல வாழ முயலாமல், நம் உடலை தேவனுடைய சேவைக்காக பயன்படுத்த வேண்டும். மக்கதோனிய சபையார் தாராளமாக தேவனுக்கு கொடுத்ததின் காரணம், அவர்கள் தங்களையே ஆண்டவருக்கு கொடுத்ததேயாகும் (2 கொரி 8:5). தேவனுடைய சேவைக்காக நாம் முழுமையாக அற்பணித்திருக்கும் போது நம்முடைய நடவடிக்கைகளை மாற்றுவது மிகவும் எளிமையாகிவிடும் (பிரசங்கி 12:13 ; மத் 6:33; 16:24 வசனங்களையும் வாசியுங்கள்).



வித்தியாசமாக வாழவிரும்பினால், நாம் வித்தியாசமாக சிந்திக்க வேண்டும்.

தற்பொழுது உலகில் உள்ள பலமான சக்திகளில் அன்பும் ஒன்று.

1 யோ 5:3 ; 4:19 – நாம் தேவனுக்கு கீழ்படிய நம்மை எது உந்துகிறது ? அவருக்கான நம்முடைய அன்பு. அவரை அன்பு கூற நம்மை எது தூண்டும்? அவர் நம்மை நேசித்தார் என்ற உண்மை. நம்மை அவர் நேசித்தார் என்று நமக்கு எவ்வாறு தெரியும்? ஏனெனில் நம்மை இரட்சிக்க அவர் தம்முடைய குமாரனை மரிக்கும்படி கொடுத்தார். தற்பொழுது உலகில் உள்ள பலமான சக்திகளில் அன்பும் ஒன்று.

அந்த அன்பு என்பது தான், எரிகிற வீட்டில் இருந்து தன் பிள்ளையை காப்பாற்ற ஒரு பெண்ணை தூண்டும் அல்லது தன் அன்புக்குரிய நபர் விபத்தில் வாகனத்திற்கு அடியில் சிக்கிக் கொண்டால் ஒரு மனிதனை அந்த வாகனத்தையே அன்புதான் தூக்கச் செய்யும். உங்களை நீங்களே மாற்றிக்கொள்ள சிரமமாக உங்களுக்கு இருந்தால், நீங்கள் தேவனுடைய ஆசீர்வாதங்களையும், இரக்கங்களையும் பாராட்ட கற்றுக்கொள்ள வேண்டும். (1 யோ 2 : 15 –17; மத் 10 : 34–37 ; 22 : 37– 40; யோ 14 : 15 ; 2 கொரி 5 : 14 – 17 வசனங்களையும் வாசியுங்கள்).

**– தொடரும்**

அன்புடன்

**உங்கள் சகோதரன், PCPR**

# அகலமான மற்றும் குறுகலான வழிகள்

## THE BROAD AND NARROW WAYS

J.C. Choate

ஒவ்வொருவரின் வாழ்விலும் முக்கியமான ஒரு முடிவை எடுக்க வேண்டிய தருணம் ஒன்று வரும். அச்சமயத்தில் அந்த நபர் விசாலமான வழியையா? அல்லது குறுகிய வழியையா? எந்த பாதையை தேர்வு செய்ய வேண்டும் என்ற தீர்மானம் செய்ய வேண்டும். தன்னுடைய மலைப்பிரசங்கத்தில் கிறிஸ்து இந்த உண்மையை முன் வைத்தார். அப்பொழுது அவர் கூறியதாவது, ''இடுக்கமான வாசல்வழியாய் உட்பிரவேசியுங்கள்; கேட்டுக்குப் போகிற வாசல் விரிவும், வழி விசாலமுமாயிருக்கிறது; அதின் வழியாய்ப் பிரவேசிக்கிறவர்கள் அநேகர். ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கிறது ; அதைக் கண்டுபிடிக்கிறவர்கள் சிலர்'' (மத் 7:13,14).

நேரான (குறுகலான) பாதைக்குள் பிரவேசிக்க இயேசு எல்லாரையும் அழைக்கின்றார். ஆனால் யாரையும் நிர்பந்திக்கவில்லை



இயேசு கிறிஸ்து என்ன சொல்ல விரும்பினார் என்பதை நாம் உற்று கவனிப்போம்! ஏனென்றால் அது அன்று அங்கே இருந்தவர்களுக்கு மட்டுமல்ல, இன்று இங்கே இருக்கும் நம் அனைவருக்கும் அவசியமானது.

முதலாவது, இரண்டு வழிகள் அல்லது பாதைகள் இருக்கிறது என்பதை நாம் கவனிக்க வேண்டும். இன்று எத்தனை வழிகள் இருக்கிறது? இரண்டு மட்டுமே! அப்படியென்றால், நாம் இந்த இரண்டில் ஏதாவது ஒன்றில் தான் பயணம் செய்ய வேண்டும். இவை அல்லாது வேறே வழி இல்லை. மேலும், ஒருவர் விசாலமான பாதையிலும், இருக்கமான பாதையிலும் ஒரே நேரத்தில் பயணம் செய்ய முடியாது. இந்த இரண்டிற்கும் இடையே வேறே பாதை இல்லை. அதாவது, நீங்கள் விசாலமான பாதையில் செல்கிறீர்கள்

என்றால், இடுக்கமான வழியில் பயணம் செய்யவில்லை; இடுக்கமான வழியில் செல்கிறீர்கள் என்றால், விசாலமான வழியில் பயணம் செய்யவில்லை.

இரண்டாவதாக நாம் கவனிக்க வேண்டியது, ஒரு வழி விசாலமானது மற்றது இடுக்கமானது. விசாலமான வழியில் அதிகமான இடம் வசதி உள்ளது; மற்ற வழி அதற்கு மாறானது. இடுக்கமான வழி நேரான ஒன்று; மற்ற வழி வளைவானது.

விசாலமான வழியில் அநேகரும், இடுக்கமான வழியில் சிலரும் பயணம் செய்கிறார்கள் என்பதை கர்த்தர் சுட்டிகாட்டுகின்றார். அப்படியென்றால், ஒன்று பிரசித்தமானது மற்றது பிரசித்தமானது அல்ல. இயேசு கிறிஸ்து, தான் என்ன பேசுகிறார் என்று தெளிவாக அறிவார்; ஏனென்றால் வரலாறும் அதே சத்தியத்தை சொல்கிறது.

விசாலமான வழி அழிவிற்குள்ளாக வழி நடத்துகிறது என்பது வேதனைக்குரிய ஒன்று. அநேகர் விசாலமான வழியில் செல்வார்கள் என்று கர்த்தர் கூறியதால், திரளான ஜனங்கள் எங்கே செல்கிறார்கள் என்று நமக்கு தெரிகிறது. ஆனால் மற்றவழி எங்கே செல்கிறது? இடுக்கமான வழி ஜீவனுக்குள்ளாக வழி நடத்துகிறது. ஒரு சிலர் மட்டும் இந்த வழியில் செல்வார்கள் என்றார் கர்த்தர். ஆகையால், சிலர் மட்டும் பரலோக வீட்டிற்கு செல்கிறார்கள் என்றும் புரிந்த கொள்ள முடிகிறது. அநேகர் இரட்சிக்கப்பட்டு இருக்கலாம், ஆனால் அழிந்து போகும் ஜனங்களின் எண்ணிக்கையோடு ஒப்பிட்டு பார்க்கும் போது, கர்த்தர் கூறியது போல் ஒரு சிலரே இரட்சிக்கப்படுவார்கள்.

நேரான பாதைக்குள் பிரவேசிக்க இயேசு எல்லாரையும் அழைக்கின்றார். ஆனால் யாரையும் அவர் நிர்பந்திக்கவில்லை. ஆனால் அதில் பிரவேசிக்கின்றவர்களை கர்த்தர் ஆசீர்வதிக்கின்றார். ஆனால், யாராவது விசாலமான பாதையில் பயணம் செய்ய விரும்பினால், பயணம் செய்யலாம். மனிதன் தேர்வு செய்யும் ஆற்றல் உள்ளவன். எதை செய்ய வேண்டும், அல்லது எதை செய்ய வேண்டாம் என்று தேர்வு செய்யும் பலம் உள்ள மனதுடையவன் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

இடுக்கமான பாதையில் பயணம் செய்வது என்பது கர்த்தருடன் பயணம்

செய்வதாகும். மாறாக, விசாலமான பாதையில் பயணம் செய்வது என்றால் சாத்தானை பின்பற்றுவதாகும். நேரான பாதையில் பிரவேசிக்க மனிதர்களோடு கர்த்தர் கெஞ்சுகின்றார், ஆனால் தன் பக்கத்தில் மனிதனை வைத்துக்கொள்ள சாத்தான் எல்லா முயற்சியும் செய்கின்றான். கர்த்தருக்கும், சாத்தானுக்கும் இடையில் ஒரு தொடர் யுத்தம் நடப்பதை நாம் காணமுடிகிறது. ஒருவர் யாரோடு நிற்பேன் என்று தீர்மானித்த உடனே, அவருக்காக சாத்தான் யுத்தம் செய்ய ஆரம்பிக்கின்றான்.

நன்மை தீமையை தேர்வு செய்யும் வயதை அடைந்தவராக நீங்கள் இருந்தால், நண்பரே கர்த்தருடன் நிற்க தீர்மானம் செய்வோம். எதிரொளியுடன் நாம் சில காலம் நடந்திருந்தாலும்



இடுக்கமான பாதையில் பயணம் செய்வது என்பது கர்த்தருடன் பயணம் செய்வதாகும். மாறாக, விசாலமான பாதையில் பயணம் செய்வது என்றால் சாத்தானை பின்பற்றுவதாகும்.

பரவாயில்லை, ஏன் நாம் மறுஆய்வு செய்து, நமக்காக மரித்தவருடன் நிற்க தீர்மானம் எடுக்கக் கூடாது? நாம் சுவிஷேசத்தை கேட்கும் ஒவ்வொரு முறையும், அல்லது சத்தியத்தை தியானிக்கும் ஒவ்வொரு முறையும், அதை ஏற்றுக் கொள்வதா அல்லது விட்டு விடுவதா என்றும் முடிவு எடுக்க வேண்டும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

கிறிஸ்துவின் சுவிஷேசத்திற்கு கீழ்படிவதின் மூலம் இடுக்கமான, நேரான வழியில் நீங்கள் பிரவேசிக்கலாம். பின்பு அந்த பாதையில் தொடர்ந்து பயணம் செய்து, எப்பொழுதும் கர்த்தருக்கு உண்மையுள்ளவராக நடந்தால் அந்தபாதை ஒரு நாள் பரலோக நகரத்தின் வாசலின் உள் நம்மை நடத்தி செல்லும்.

‘‘நானே வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறேன். என்னாலே அல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்” (யோ 14:16).

– (தமிழில்)

**கேமிலஸ்**

இளம் பெற்றோருக்கான சிறப்புப் பாடம் : பாடம் -1

# கீழ்படியாமையில் வளர்த்தல்

## Training in Disobedience

Betty Choate

சிறுவன் ஜானியின் அம்மா, “இல்லை, அதைச் செய்யாதே !” என்று கூறினார் ; ஆனால் அவருடைய வார்த்தை செவிட்டுக் காதுகளில் விழுந்ததைப் போல் இருந்தது; அவனுள் ஒன்றுமே பதிவாகவில்லை. கொஞ்சம்கூட தயக்கமில்லாமல் அவன் தொடர்ந்து நடந்து போய், முற்றிலுமாக அவனுடைய தாயின் சொல்லை புறக்கணித்து, அவனுக்கு செய்யக்கூடாது என தடைசெய்யப்பட்டதை செய்தான். இந்த முறை அவனுடைய அம்மா பின்னே விரைந்து ஓடி, அரைமனதுடன் அவனுடைய ஜீன்ஸ் பேன்டின் பின்பக்கமாக தட்டி, “நான் அதைச் செய்யாதே என உன்னிடம் கூறினேன் அல்லவா?” என்றார்.

ஆனால் அந்த அடி அவனுக்கு உரைக்கவுமில்லை, அவன் கீழ்படியும்படியான எண்ணம் அவனுக்கு வரவுமில்லை. உண்மையில், இதற்கு முன் இந்தக் காரியத்திற்கு அவன் கொடுத்த கவனத்தைப் போல சிறிதளவே கவனம் இப்பொதும் செலுத்தினான். அந்த சமயத்தில், அவனும் அவனுடைய தாயும் சேர்ந்தே, அவனுடைய கீழ்படியாமையை எளிமையாக உதாசினம் செய்தனர்.

இவ்வாறு தான், ஒரு ஒன்றுமறியா குழந்தை, அதிகாரத்திற்கு கீழ்படியாமை எனும் ஆபத்தான விளையாட்டினுள் பயிற்சிக்கப்படுகின்றது. ஒரு வேளை இந்த சிறுவன், பெரியவனாகும் போது, நியாத்தீர்ப்புக்கு (பெரியவர்களின் சரியான சொல்லிற்கு) தன்னை வளைத்துக்கொள்வானா? (சிலர் அதிசயமாக அப்படி செய்வர்); அல்லது அவன் ஒரு கோபக்காரனாக, போராடும் வாலிபனாக அல்லது எளிமையாக சட்டங்களை உடைத்து சிறையில் தன் காலத்தை செலவிடுவானா என, இப்போதைக்கு யாராலும் கூற முடியாது.

ஆனால் அவன், ஒவ்வொரு நாளும் ஏதே ஒரு நிலையை நோக்கி பயிற்றுவிக்கப்படுகிறான். அவனுடைய பெற்றாரும், சமுதாயமும் ஒழுக்கத்தின் குறைபாடு அன்பும் மனிதத்தன்மையும் என நினைக்கலாம்; ஆனால் அவனுக்கு தேவையான பாதுகாப்பு எல்லையை இழக்கிறான். அதாவது பாதுகாப்பாகவும் நிதானமாகவும், கீழ்படியும் குடிமகனாகவும், கடவுளுக்கு பிள்ளையாகவும் வளரும் தருணத்தை அவன் இழக்கின்றான். நீதி 22:6 ல் தேவன் பெற்றாருக்கு, “பிள்ளையானவன் நடக்க வேண்டிய

வழியிலே அவனை நடத்து அவன் முதிர்வயதிலும் அதை விடாதிருப்பான் என்று கூறும்போது, அதுதான், ஒரு புதிய பொருளை வாங்கி பயன்படுத்தும்போது "பயன்படுத்தும் முறை'' என்று விதிகள் இருக்குமல்லவா? அதைப் போன்றது. எல்லாருக்கும் ஆபத்து உண்டாகும்படி நாம் அதனை புறக்கணிக்கிறோம்.

முரட்டுத்தனமான மற்றும் கீழ்படியாத பிள்ளைகள், தங்களுக்கும் தங்கள் பெற்றாருக்கும் தங்கள் வீட்டில் உள்ள அனைவருக்கும் வேதனையை வருவிக்கிறார்கள். சூழ்நிலைகளை பிள்ளைகள் தங்கள் பெற்றாரைவிட சீக்கிரமாக கனித்துவிடுகடிறார்கள். காரியம் எப்படி நடக்கும்? என்ன செய்தால் பெற்றாரை மாற்றலாம்? அவர்கள் விரும்புவதை சாதிப்பது எப்படி? அப்பா, அம்மா சொல்லுவதை



கீழ்படியாத பிள்ளைகள்,

தங்களுக்கும் தங்கள்

பெற்றாருக்கும் தங்கள்

வீட்டில் உள்ள அனைவருக்கும்

வேதனையை வருவிக்கிறார்கள்.

செய்யாமலிருக்க எவ்வளவு நேரம் அடம்பிடிக்கனும் என்றெல்லாம் பிள்ளைகளுக்கு நன்றாக தெரியும். அதற்காகத்தான் அவர்கள் நெடுநேர கோபம், அடம்பித்தல் மற்றும் அழுகை ஆகிறவற்றை தாங்கள் சாதிக்கும் வரை பயன்படுத்துகின்றனர். பின்பு குடும்பம் சந்தோஷமாக எப்படி இருக்கும்? கஷ்டம் தான்!

குடும்பத்தின் சூழ்நிலைகள் இங்கே குறிப்பிட்டப்படி எப்போதும் மோசமானதாக இருக்க வேண்டிய அவசியம் இல்லை. இப்படிப்பட்ட சூழ்நிலைகளை மாற்றும் அதிகாரம் மட்டும் பெற்றாருக்கு இல்லாமல், அவர்கள் தேவனுக்கு முன்பாக பொறுப்பும் உடையவர்கள். நீதிமொழிகளில் உள்ள வசனம் சொல்வதென்ன? "நடத்து" (Train). பெற்றார் தங்கள் சிறு பிள்ளைகளை வார்த்தையினால் போதிக்கவும், முன் மாதிரியினால் பயிற்றுவிக்கவும், கீழ்படிதலை வற்புறுத்தி வடிமைக்கவும் வேண்டிய சில நிலைகளை நான் உங்களுக்கு கூறுகிறேன். விளைவு என்னவாக இருக்கும் தெரியுமா? வீட்டில் உண்மையான சந்தோஷம்!

**– தொடரும்**

**– (தமிழில்)**

**கிங்ஸ்லி ராஜா**

# அன்று ... அப்போஸ்தலர்கள் பெற்ற பரிசுத்த ஆவியில் ஞானஸ்நானம்

இயேசு கிறிஸ்துவுக்கு ஒப்பாக, இன்று பரிசுத்த ஆவியை யாரும் பெறுவதில்லை என்பதை கடந்த இதழில் (கட்டுரை 4-ல்) கற்றுக் கொண்டோம். இக்கட்டுரையில், அன்று அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியால் (முழுக்குதல்) ஞானஸ்நானத்தை பெற்ற காட்சியைக் காண்போம். இக்கட்டுரையின் நிறைவில் அப்போஸ்தலர்கள் மட்டுமே பரிசுத்த ஆவியால் ஞானஸ்நானம் பண்ணப்பட்டார்கள் என்பதையும், அப்போஸ்தலர்களுக்கு ஒப்பாக இன்று யாரும் பரிசுத்த ஆவியை பெறுவதில்லை என்பதையும் ஆதாரப் பூர்வமாக அறுதியிட்டுக் காண்பீர்கள். அப்போஸ்தலர்களைப் போல பரிசுத்த ஆவியைப் பெறமுடியாது.

1. ஏனெனில் யோவான் அப்போஸ்தலனுக்குப் பிறகு 'அப்போஸ்தலர்' என்ற தகுதி பெற்றவர் யாருமில்லை.

அப்போஸ்தலர் 1:21,22-ல் ஒரு அப்போஸ்தலனுக்கு இருக்க வேண்டிய தகுதியாம்சத்தைக் குறிப்பிடுவதிலிருந்து, இதை அறிந்து கொள்கிறோம். இதை முழுமையாக அறிய வேண்டுமானால் சற்று பின்னோக்கிச் செல்ல வேண்டும்.

**சீஷர்கள் வேறு, அப்போஸ்தலர்கள் வேறு :**

தங்களை கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக் கொள்ளும் ஏராளமானோர், இந்த சிறிய விளக்கத்தைப் புரிந்து கொள்ள இயலவில்லை. சீஷன் என்றால் குருவைப் பின்பற்றுபவன் (The Follower), அல்லது கற்றுக் கொள்பவன். கிறிஸ்துவாகிய குருவை எப்பொழுதும் திரளான கூட்டம் பின் பற்றிப் போய்க் கொண்டிருந்தது. தமது வேலை வந்த போது தாமே ''அழைத்தவர்களும்'' கிறிஸ்துவின் ''எல்லா உபதேசங்களையும்'' கேட்டவர்களாகிய பன்னிரண்டு பேரை மட்டுமே அப்போஸ்தல பட்டத்தைக் கொடுத்து பிரித்துக் காட்டுகிறார் (லூக்கா 6:13-16). "பொழுது விடிந்தபோது, அவர் தம்முடைய சீஷர்களை வரவழைத்து, அவர்களில் பன்னிரெண்டு பேரைத் தெரிந்து கொண்டு, அவர்களுக்கு "அப்போஸ்தலர்" என்று பேரிட்டார்", (லூக்கா 6:13). அவர் அவர்களுக்கு விசேஷித்த அப்போஸ்தல "அதிகாரத்தைக் கொடுத்தார்" (மத்தேயு

10:1). இது முதற்கொண்டு இவர்கள் தனித்துக் காட்டபடுகின்றனர்.

எல்லா சீஷர்களும் அப்போஸ்தலரல்ல. ஆனால் அப்போஸ்தலர்களெல்லாம் சீஷர்களாயிருந்து வந்தவர்கள். வக்கீல்களெல்லாம் நீதிபதிகள் அல்ல, ஆனால் நீதிபதிகள் வக்கீல்களாக இருந்து வந்தவர்கள். அப்போஸ்தலர் என்பது இவர்களுக்கென அளிக்கப்பட்ட பட்டம் (அப். 1:24). பவுல் அவர்களை “மகா பிரதான” அப்போஸ்தலர் என்று சொன்னார், (2 கொரிந்தியர் 11:5). மேலும் பவுல் அவர்களை ‘‘எண்ணிக்கையுள்ளவர்களென்று’’ சொன்னார் (கலாத்தியர் 2:26). இந்தக் கூட்டத்துடன் (12 பேருடன்) பவுலே தம்மை இணைத்துக் கொள்ளக் கூடாத போது, இன்று கண்டவர்களெல்லாம் தங்களை “அப்போஸ்தலர்” என்றும், ‘‘அப்போஸ்தல பாஸ்டர்’’ என்றும் அழைத்துக் கொள்வது வேடிக்கையானது.



அப்போஸ்தலர்கள் மட்டுமே பரிசுத்த ஆவியால் ஞானஸ்நானம் பெற்றனர்; அவர்களுக்கு ஒப்பாக இன்று யாரும் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தை பெறுவதில்லை.

இயேசு தேர்ந்தெடுத்த பன்னிருவரில் யூதாஸ்காரியோத் தீர்க்கதரிசனத்தின் படியும், ஆண்டவரைக் காட்டி கொடுத்த தவறின் உறுத்தலினாலும் நான்டு கொன்டு செத்த பொழுது, பன்னிருவருக்குரிய பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தைக் குறித்த வாக்குத்தத்தின் நிறைவேற்றத்திற்காக மற்றொரு அப்போஸ்தலனை தேர்ந்தெடுக்க வேண்டிய நிர்பந்தம் இருந்தது. எனவே யூதாஸிற்கு பதிலாக ஒருவரைத் தேர்ந்தெடுக்க அப்போஸ்தலர் 1-ம் அதிகாரத்தில் பேதுரு கேட்டுக் கொண்ட போது, கூடி வந்திருந்த சீஷர்கள் கூட்டத்தையும் அப்போஸ்தலர்களையும் பிரித்துக் காட்டுகிறார். வச.17, “அவன் (யூதாஸ்) எங்களில் ஒருவனாக எண்ணப்பட்டான்’’, ‘‘இந்த (அப்போஸ்தலர்) ஊழியத்திலே பங்கு பெற்றவனாயிருந்தான்”.

வச. 20, ‘‘...அவனுடைய கண்காணிப்பை வேறொருவன் பெறக் கடவன்’’, வச. 21,22 ‘‘யோவான் ஞானஸ்நானம் கொடுத்த நாளிலிருந்து இயேசுவானவர் பரமேறிச் சென்ற நாள் வரை அவருடனே கூட இருந்தவர்களில் ஒருவன் சாட்சியாக ஏற்படுத்தப்பட வேண்டும்”.

இதைக் கேட்ட போது, அங்கு கூடியிருந்த சீஷர் கூட்டத்திலிருந்து இரண்டுபேரை நியமித்து ஒருவரை தேர்ந்தெடுத்தனர். (வச 23-26). சீஷர்களே அப்போஸ்தலர்களானால் எனது கேள்வி,

1. அந்தக் கூட்டத்திலிருந்த இரண்டுபேர் நியமிக்கப்பட்டது ஏன்?

2. ஒருவருக்கு மட்டுமே தகுதியிருந்ததாக பரிசுத்த ஆவியானவர் தேர்ந்தெடுத்தது ஏன்?

3. தேர்ந்தெடுக்கப்பட்ட மத்தியா "பதினொருவருடன்" சேர்க்கப்பட்டது ஏன்?

4. அப்போஸ்தலனாகிய யாக்கோபு கொலை செய்யப்பட்டபின், இன்னொரு அப்போஸ்தலனை தேர்ந்தெடுக்காதது ஏன்?

இந்தக் கேள்விகளுக்கு பதில் கண்டுபிடிப்பீர்களானால் பெந்தகோஸ்தே நாளிலே, 12 அப்போஸ்தலர்கள் தான் பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பெற்றார்கள் அவர்களுக்கு ஒப்பாக இன்று யாரும் பரிசுத்த ஆவியை பெறுவதில்லை என்பதையும் தெளிவாகக் காணமுடியும்.

பெந்தகோஸ்தே நாளில் 12 அப்போஸ்தலர்கள் மட்டுமே பரிசுத்த ஆவியானால் ஞானஸ்நானம் பெற்றார்கள் என்பதற்கான ஆதாரங்களை மேலும் காண்போம். அதுவரை...

**சகோ. இ. ஏ. ஆறுமுகம்**,
திண்டுக்கல்.

## தெரிந்துக்கொள்ளுங்கள்

### இதைச் சாப்பிடக்கூடாது?

- ❖ வெண்ணையுடன் காய்கறிகளை சேர்த்துச் சாப்பிடக் கூடாது. இதனால் தீமை விளையும்.
- ❖ நல்லெண்ணெயில் கோதுமையை சமைத்தால் கண்ணைக் கெடுக்கும்.
- ❖ தயிருடன் சிக்கன் சாப்பிடக் கூடாது.
- ❖ மீன் சாப்பிடும்போது அதனுடன் வெல்லம், சர்க்கரை, கரும்பு சம்பந்தமான எதையும் சாப்பிடக்கூடாது.
- ❖ பாலும் பழமும் ஒரே நேரத்தில் சாப்பிடக்கூடாது. எந்த கனிகளையும் பாலுடன் சேர்த்துச் சாப்பிடக்கூடாது.



சிறுவர் பகுதி :

# இயேசு கைதுசெய்யப்படல் 1

மத் 26:30-56, மாற் 14:26-50, யோவான் 18:1-13

**சம்பவ சுருக்கம்** :

ஆண்டவராகிய இயேசு தமது 12 அப்போஸ்தலர்களுடன் பஸ்காவை அனுசரித்த பின்பு, யூதாஸ் தவிர்த்து மற்ற அப்போஸ்தலர்களுடன் ஒலிவ மலைக்கு சென்றார். அப்பொழுது, ஆண்டவர் இந்த இரவிலே என்னிமித்தம் நீங்கள் எல்லாரும் சிதறடிக்கப்படுவீர்கள் என்றார். மேலும், பேதுருவிடம் நீ என்னை மறுதலிப்பாய் என்றார். அப்பொழுது, அவர்களில் பேதுரு, யாக்கோபு மற்றும் யோவான் ஆகிய மூன்று பேரை கூட்டிக் கொண்டு தனித்து ஜெபம் பண்ணும்படி கெத்சமனே என்னும் தோட்டத்திற்கு சென்றார். மூன்று பேரையும் ஜெபிக்க சொல்லிவிட்டு, சற்று அப்புறம் போய் முழங்காற்படியிட்டு ஆண்டவர் ஜெபித்தார். அவர் முகத்தின் வேர்வை இரத்ததின் பெருந்துளிகளாய் தரையிலே விழுந்தது. அவர் ஜெபம் பண்ணி முடித்தபின்பு தமது சீடர்களிடத்தில் வந்தார். அவர்கள் மூன்று பேரும் ஜெபிக்காமல், தூங்கிக்கொண்டிருந்தனர். இயேசு, எனக்காக நீங்கள் ஒரு மணி நேரம் கூட ஜெபிக்கக் கூடாதா? ஆவி உற்சாகமுள்ளது, மாமிசம் பெலவீனமானது. ஆகையில் ஜெபியுங்கள் என்று சொல்லி மறுபடியும் ஜெபிக்க சென்றார். மறுபடியும் அவர்கள் தூங்கினார்கள். மூன்றாம் முறையும் அவர் ஜெபித்தார். அவர்களோ தூங்கினார்கள். அந்த இடத்தை யூதாஸ் அறிந்திருந்தபடியால் அவன் வேதபாரகர், பரிசேயர் மற்றும் போர்சேவகருடன் வந்து இயேசுவை முத்தமிட்டு காட்டிக்கொடுத்தான். அப்பொழுது அவர்கள் இயேசுவை கைது செய்தனர். இதைக்கண்ட பேதுரு தனது பட்டயத்தால் மல்குஸ் எனும் போர் சேவகனின் காதை வெட்டினான். இயேசு பேதுருவை “பட்டயத்தை எடுப்பவன், பட்டயத்தால் மடிவான்” என்று கடிந்து கொண்டு, வெட்டப்பட்ட திணை ஒட்ட வைத்தார். அவர்கள் இயேசுவை கைது செய்து பிடித்துக்கொண்டு சென்றனர்.

டியர் குட்டீஸ் ! நமது ஆண்டவர், தான் சந்திக்க போகிற துன்பத்திற்காக தேவனிடம் பெலம் கேட்டு ஜெபித்தார். நாமும் கஷ்டம் வேண்டாம் என்று ஜெபிக்காமல், கஷ்டத்தை தாங்க பெலம் கேட்டு ஜெபித்து, கஷ்டத்தை ஜெபிப்போம். படிப்போ, பணமோ, யாரும் உன்னை நேசிக்கவில்லை என வெறுமையாக உணரும் எந்த கஷ்டமானாலும் தேவ பெலத்திற்காக ஜெபி. தேவன் நிச்சயம் துணை செய்வார்.

**மனன வசனம்** :– **மத்தேயு 26:41**

“நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள் ; ஆவி உற்சாகமுள்ளது தான், மாம்சமோ பலவீனமுள்ளது என்றார்”.

# ஆண்டவர் விசாரிக்கப்படுதல் 2

**வசன பகுதி : மத் 26:56-75, மாற் 14:50-72, யோ 18:13-40**

**சம்பவ சுருக்கம் :**

ஆண்டவர் இயேசுவை கைது செய்தவர்கள் அவரை பிரதான ஆசாரியனாகிய காய்பாவினிடத்திற்கு கொண்டு போனார்கள். அங்கே வேதபாரகர், மூப்பர் யாவரும் கூடிவந்திருந்தனர். பேதுருவும், அரமணைக்குள்ளே வந்து முடிவை பார்க்கும்படி போர் சேவகருடனே உட்கார்ந்திருந்தான். அவர்கள் அனைவரும் இயேசுவிற்கு விரோதமாக பொய்சாட்சி சொல்லியும், அவர்கள் சாட்சி ஒவ்வவில்லை. இரண்டு பேர் இயேசுவிற்கு விரோதமாக தேவனுடைய ஆலயத்தை இடித்து, மூன்று நாளைக்குள்ளே கட்ட என்னாலே முடியும் என்று இயேசு சொன்னதாக அவர்மேல் குற்றம் சாட்டினார்கள். இயேசுவோ பேசாமலிருந்தார். பிரதான ஆசாரியன் தன் வஸ்திரத்தை கிழித்து, இயேசு தேவதூஷனம் சொன்னதாக, மரணதண்டனைக்கு பாத்திரமாக அவரை குற்றவாளியாக தீர்த்தார்கள். அவர்களில் சிலர் இயேசுவின் முகத்திலே துப்பினார்கள். சிலர் அவர் தலையிலே குட்டினார்கள். கன்னத்தில் அறைந்தார்கள். வேலைக்காரி ஒருத்தி பேதுருவை கண்டு, நீ அவர்களில் ஒருவன் தானே என்று சொன்னாள். பேதுருவோ இயேசு எனக்கு யாரென்றே தெரியாது என மறுதலித்தான். மூன்று முறை அவன் இயேசுவை மறுதலித்தான். அப்பொழுது சேவல் கூவியது. பேதுரு இயேசு சொன்ன வார்த்தையை நினைத்து பார்த்து மனங்கசந்து அழுதான்.

டியர் குட்டீஸ் ! நம்மேல் யாராவது குற்றம் சாட்டினால் நமக்கு கோபம் வருகிறது. நம்மை நல்லவர்களாக நிருபிக்க முயலுகிறோம். ஆனால், நமது ஆண்டவர் இயேசு தன்னை நிருபிக்க முயலவில்லை. ஏன் ? ஏனெனில், தேவனே இறுதி நியாதிபதி. நாமும் குற்றச்சாட்டுகளை பொறுத்துக் கொள்வோம். ஒரு நாள் அவர்கள் நம் பட்சத்திலிருக்கிற நியாயத்தை உணருவார்கள். அதுவரை நாம் பொறுமையாக, தேவனுக்கு விருப்பமானதை மட்டும் செய்வோம். நீ தவறு செய்யாத போதும், உன் அப்பாவோ, அம்மாவோ ஆசிரியரோ, மற்ற யாரோ உன்னை திட்டினால் பொறுத்துக் கொள் ! நமது ஆண்டவரே பொறுமையாக இருந்ததை மறக்க வேண்டாம்.

**மனன வசனம் :- பேதுரு 2 :20**

“நீங்கள் நன்மை செய்து பாடுபடும் போது, பொறுமையோடே சகித்தால் அதுவே தேவனுக்கு முன்பாகப் பிரீதியாயிருக்கும்”.

# ஆண்டவர் சிலுவையில் அறையப்படுதல் 3

வசன பகுதி மத் 27, மாற் 15, லூக் 23

**சம்பவ சுருக்கம்** :

விடியற்காலமான போது, அவர்கள் இயேசுவை பிடித்துக் கொலைசெய்யும்படி, அவருக்கு விரோதமாக ஆலோசனை பண்ணி, அவரை கட்டி, தேசாதிபதியாக பிலாத்துவினிடத்தில் ஒப்புக் கொடுத்தார்கள். பிலாத்து இயேசுவை விசாரித்து அவரிடத்தில் ஒரு குற்றமில்லை என உணர்ந்து, ஜனங்களிடத்தில் சென்று இவர்மேல் ஒரு குற்றமுமில்லையே என்று சொன்னான். அவர்களோ, இயேசுவை சிலுவையிலறையும் என்று சொன்னார்கள். தேசாதிபதியின் மனைவி அவனிடத்தில் ஆள் அனுப்பி, அந்த நீதிமானை ஒன்றும் செய்ய வேண்டாம் என்று சொன்னாள். பண்டிகை தோறும் காவல் பண்ணப்பட்டவர்களில் ஒருவரை ஜனங்கள் விருப்படி விடுதலையாக்குவது தேசாதிபதிக்கு வழக்கமாயிருந்தது. அவன் ஜனங்களிடம் யாரை விடுதலையாக்க வேண்டும், பரபாசையா? கிறிஸ்துவையா? என்று கேட்டான். ஜனங்கள் பரபாசை விடுதலை செய்யும், இயேசுவை சிலுவையிலறையும் என்று கூச்சலிட்டப்படியால், பிலாத்து கையை கழுவி இந்த நீதிமானின் இரத்தபழிக்கு நான் நீங்கலாயிருக்கிறேன் என்று சொல்லி, ஆண்டவர் இயேசுவை வாரினால் அடித்து, சிலுவையில் அறையும் படிக்கு ஒப்பு கொடுத்தான். அவர்கள் இயேசுவின் தலையில் முள்முடி சூட்டி, வாரினால் அடித்து, அவர்மேல் துப்பி, அவருடைய வஸ்திரத்தை கழற்றி, பரியாசம் செய்து கபாலஸ்தலம் எனும் அர்த்தங்கொள்ளும் கொல்கொதா எனும் இடத்தில் அவரை சிலுவையில் அறைந்தார்கள். அந்தபடியே அவருடன் வலது, இடது புறமாக இரண்டு கள்ளரும் சிலுவையில் அறையப்பட்டார்கள். இயேசு தன்னை துன்பப்படுத்தினவர்களை மன்னிக்கும்படி பிதாவிடம் ஜெபித்தார். 'எல்லாம் முடிந்தது' என்று சொல்லி தம் ஜீவனை பிதாவின் கையில் ஒப்படைத்து விட்டார்.

டியர் குட்டீஸ் ! நமது ஆண்டவர் தன்னை அவமானப்படுத்தி, வேதனைப்படுத்தி காயப்படுத்தி, கொடூரமான முறையில் கொலை செய்தவர்களை மன்னிக்கும்படி பிதாவிடம் ஜெபித்தார். நமக்கு யாராவது, என்ன தீங்கு செய்தாலும், ஒரு வேளை. அது நமது தோழனாக, தோழியாகவோ அல்லது யாராக வேண்டுமானாலும் இருக்கலாம் அவர்களை நாம் மன்னிக்க வேண்டும். நம் பிதாவும் அவர்களை மன்னித்து, ஆசீர்வதிக்கும்படி ஜெபிக்க வேண்டும்.

மனன வசனம் : மத் 5:44

"உங்கள் சத்துருக்களை சிநேகியுங்கள் ; உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள் ; உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள் ; உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும், உங்களைத் துன்பபடுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள்".

# ஆண்டவர் உயிர்தெழுதல் 4

மத் 28, மாற் 16, லூக் 24, யோ 20

**சம்பவ சுருக்கம்** :

சிலுவையில் அறைந்த பின்பு ஆண்டவர் மரித்துவிட்டார் என்பதை உறுதி செய்ய அவர் விலாவிலே ஈட்டியால் குத்தினார்கள் தண்ணீரும் இரத்தமும் வந்தது. அவர் மரித்துப்போய் விட்டார் என்பதை போர்சேவர்கள் உறுதி செய்தனர். பணக்காரனான யோசேப்பு என்னும் இயேசுவின் சீடன் அவருடைய சடலத்தை அடக்கபண்ண பிலாத்துவினடத்தில் கேட்டடான். பிலாத்து அதைக் கொடுக்கும்படி கட்டளையிட்டான். மெலிதான துப்பட்டாவினால் இயேசுவின் சடலத்தை சுற்றி தான் கன்மலையில் வெட்டிலிருந்த கல்லறையினுள் வைத்து, வாசலில் ஆரு பெரிய கல்லை புரட்டி வைத்தான். பிரதான ஆசாரியரும், பரிசேயரும் தங்களது போர் சேவகர்களைக் கொண்டு கல்லறையை முத்திரையிட்டு பாதுகாத்தார்கள், ஓய்வு நாள் முடிந்து வாரத்தின் முதல் நாள் காலையிலே மகதலேனா மரியாளும், மற்ற மரியாளும் கல்லறையை பார்க்க வந்தார்கள். கல்லறையின் கல்லை புரட்டி தள்ளி, அதன் மேல் கர்த்தருடைய தூதன் உட்காந்திருந்தான். காவலர் அவரைகண்டு திடுக்கிட்டு செத்தவர்கள் போலானார்கள். தூதன் அந்த பெண்களிடம், 'நீங்கள் பயப்படாதேயுங்கள் சிலுவையில் அறையப்பட்ட இயேசுவைத் தேடுகிறீர்கள். அவர் இங்கே இல்லை. அவர் உயிர்த் தெழுந்தார். இதனை போய் அப்போஸ்தலருக்குச் சொல்லுங்கள்' என்றார். அந்தப்படியே அந்தப் பெண்கள் புறப்பட்டு அவருடைய அப்போஸ்தலருக்கு அறிவித்தார்கள் .

டியர் குட்டீஸ்! நமது ஆண்டவர் இயேசு, தாம் சொன்னப்படியே மூன்றாம் நாளில் உயிர்ந்தெழுந்தார். உயர்த்தெழுந்து அநேகருக்கும் தமது அப்போஸ்தலருக்கும் தரிசனமானார். நாம் நம்புகிற ஆண்டவர் 'சொன்னதை செய்கிறவர்'. ஜீவனுள்ளவர். அவரை நம்புவோம். நிச்சயம் இவ்வுலகிலும், பரலோகிலும் வாழ்ந்து சுகித்திருப்போம்

**மனன வசனம்** : **வெளி 1:18**

"மரித்தேன், ஆனாலும், இதோ, சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறேன்."

# பிதாவுக்கும் குமாரனுக்கும் பொருந்தக்கூடியவை, பொருந்தக்கூடாதவை

**சென்ற இதழின் தொடர்ச்சி...**

**6. பலி**

**அ. பிதாவாகிய தேவன்**

பாவங்களுக்காக பலிகளை ஏற்றுக்கொள்ளுகிறவர். இயேசுவானவர் நித்திய ஆவியினாலே தம்மைத்தாமே சுகந்த வாசனையான பலியாக தேவனுக்கு ஒப்புக்கொடுத்தார் (எபி.9;14;எபி.5:2). தேவன் பாவ மன்னிப்பைக் கொடுக்கிறவர் (அப். 8:22).

**ஆ. இயேசுவானவர்**

இவர் பாவமன்னிப்பை ஏற்படுத்துகிறவர். இவர் பாவங்களுக்காக ஒரே பலியைச் செலுத்தினார் (எபி. 10:12). தம்மைத்தாமே பலியிடுகிறதினாலே இதை ஒரேதரம் செய்து முடித்தார் (எபி. 7:27). சர்வலோகத்தின் பாவங்களையும் நிவிர்த்தி செய்கிற பலியாயிருக்கிறார் (1யோவா. 2:2). இயேசுவின் இரத்தம் பாவத்திற்கு பரிகாரமாக தேவ சமூகத்தில் செலுத்தப்பட்டது (எபி. 9:12). இயேசுவானவர் பாவமன்னிப்பை ஏற்படுத்தும் பொருட்டு பலி செலுத்துகிறவர். தேவன் அதை ஏற்றுக்கொள்ளுகிறவராயிருக்கிறார்.

**7. நியமித்தல்**

**அ. பிதாவாகிய தேவன்**

இவர் இயேசுவை சர்வத்துக்கும் சுதந்திரவாளியாக நியமித்தார் (எபி. 1:2). இவர் இயேசுவை, உலகத்தை நியாயம் விசாரிக்கிற நீதிபதியாக நியமித்தார் (அப். 17:31). இயேசுவை இரட்சிப்பின் அதிபதியாக உபத்திரவங்களைக் கொண்டு பூரணப்படுத்தினார் (எபி. 2:10). தேவன் சபைக்குத் தலைவராக இயேசுவைக் கொடுத்தார் (எபே. 1:23).

**ஆ. இயேசுவானவர்**

இவர் தேவனால் நியமிக்கப்பட்டவர், ஆண்டவரும் கிறிஸ்துவுமாக ஆக்கப்பட்டவர், நியாயாதிபதியாக ஏற்படுத்தப்பட்டவர், தேவனுடைய வலது கரத்தினாலே உயர்த்தப்பட்டவர் (அப்.2:33,பிலி. 2:9, எபே.1:21).

**8. ஒப்புக்கொடுத்தல்**

**அ. பிதாவாகிய தேவன்**

பிதாவானவர் குமாரனில் அன்பாயிருந்து எல்லாவற்றையும் அவருக்கு ஒப்புக்கொடுத்திருக்கிறார் (யோவா. 3:35). மாம்சமான யாவர் மேலும் இயேசுவுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டது, (யோவா. 17:2).

நியாயத்தீர்ப்பு செய்யும் அதிகாரம் முழுவதும் இயேசுவுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிறது (யோவா.5:22). சகலத்தையும் தேவன் இயேசுவின் பாதங்களுக்கு கீழ்ப்படுத்தினார் (1கொரி. 15:27,28).

**ஆ. இயேசுவானவர்**

பிதாவானவர் எல்லாவற்றையும் தம்முடைய கையில் ஒப்புக்கொடுத்தார் என்பதை இயேசு அறிந்திருக்கிறார் (யோவா. 13:3). வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது (மத். 2:17) என்று இயேசு சொல்லுகிறார். குமாரன்தாமும் தமக்கு சகலத்தையும் கீழ்ப்படுத்தின தேவனுக்கு கீழ்ப்பட்டிருப்பார் (1கொரி. 15:28).

**9. ஜீவன்**

**அ. பிதாவாகிய தேவன்**

இவர் தம்மில்தானே



உலகத்தால்
கறைபடாதபடி
தன்னைக் காத்துக்
கொள்ளுகிறதே
மாசில்லாத சுத்தமான
பக்தி!

**– யாக் 1:27**

ஜீவனுள்ளவராயிருக்கிறார். அதாவது இவர் என்றென்றைக்கும் உயிருள்ள தேவனாயிருக்கிறார் (யோவா.5:26).

**ஆ. இயேசுவானவர்**

இவர் தம்மில்தாமே ஜீவனுள்ளவராயிருக்கும்படி தேவன் அருள் செய்திருக்கிறார் (யோவா 5:26). இவர் பிதாவினால் பிழைத்திருக்கிறார் (யோவா.6:57). இவர் தேவனுக்கென்று பிழைத்திருக்கிறார் (ரோம.6:10).

**10. ஆராதனை**

**அ. பிதாவாகிய தேவன்**

இவர் ஆராதிக்கப்படுகிறவர். அதாவது எல்லாரும் இவருக்கே ஆராதனை செய்ய வேண்டும் (யோவா. 4:24). உன் தேவனாகிய கர்த்தரைப் பற்றிக்கொண்டு அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக (மத்.4:10). பயத்தோடும் பக்தியோடும் தேவனுக்குப் பிரியமாய் ஆராதனை செய்யக்கடவோம் (எபி. 12:28). உதடுகளின் கனிகளாகிய ஸ்தோத்திரப்பலியை இயேசுவின் மூலமாய் எப்பொழுதும் தேவனுக்கு செலுத்தக்கடவோம் (எபி. 13:15).

**ஆ. இயேசுவானவர்**

எங்கே இரண்டுபேர் அல்லது மூன்றுபேர் கூடுகிறார்களோ அங்கே இயேசுவானவர் இருக்கிறார் (மத். 18:20). இவர் பிரதான ஆசாரியராக

இருந்து ஆராதனையை தலைமை ஏற்று நடத்துகிறார். நம்மை தேவனிடத்தில் சேர்க்கும்படி மரித்தார் (1 பேது.3:18). நம்மை தேவனோடு ஒப்புரவாக்கினார் (எபே. 2:16). நாம் ஜீவனுள்ள தேவனுக்கு ஊழியம் செய்வதற்கு இயேசுவின் இரத்தம் நம்முடைய மனச்சாட்சியை சுத்திகரிக்கிறது. இயேசுவின் நாமத்தில் தேவனிடத்தில் வேண்டிக்கொள்ளும்படி அதிகாரம் பெற்றிருக்கிறோம் (யோவா.16:23).

மேற்சொல்லப்பட்ட சத்தியங்களை நாம் கவனித்துப் பார்க்கும்போது பிதாவானவருக்குப் பொருந்தாத சில காரியங்களைப் பார்க்கிறோம். இங்கே மரிக்கிறவர் ஒருவர், அவரை மரித்தோரிலிருந்து எழுப்புகிறவர் இன்னொருவர். பலியை ஏற்றுக்கொள்ளுகிறவர் இன்னொருவர். சோதிக்கப்படுகிறவர் ஒருவர் சோதிக்கப்படாதவர் இன்னொருவர். தரிசனமாகிறவர் ஒருவர் தரிசனமாகாதவர் இன்னொருவர். தரிசனமாகிறவர் ஒருவர் தரிசனமாகாதவர் இன்னொருவர். நியமிக்கிறவர் ஒருவர் நியமிக்கப்பட்டவர் இன்னொருவர். அதிகாரம் கொடுத்தவர் ஒருவர் அதிகாரம் பெற்றவர் இன்னொருவர். இவ்விதமாக பிதாவும் குமாரனும் ஆள்தத்துவத்தில் தனித்தனியாக இருப்பதை வெட்ட வெளிச்சமாக காண்கிறோம்.

மேற்சொல்லப்பட்ட சத்தியங்களில், இயேசு கிறிஸ்துவுக்கு ஒத்துவராத தகுதிகளையுடைய வேறொருவர் இருக்கிறார் என்பதை அறிகிறோம். ஒருவராய், சாவை அறியாத அவர் யார்? தரிசனமாகாத, அதாவது கண்ணுக்குப் புலப்படாதிருக்கிற அவர் யார்? தரிசனமாகாத அதாவது கண்ணுக்குப் புலப்படாதிருக்கிற அவர் யார்? மனுஷரில் ஒருவரும் கண்டிராதவரும், மனுஷரால் காணவும் கூடாதவருமாயிருக்கிற அவர் யார்? சோதிக்கப்படக் கூடாதவருமாயிருக்கிற அவர்யார்? இந்தக் கேள்விகளுக்கெல்லாம் ஒரே பதில் மட்டுமே உண்டு. அவரே பிதாவாகிய தேவன். மேலும் சில உறுதியான சத்தியங்களை அறிந்து கொள்வது அவசியமாய் இருக்கிறது.

– தொடரும்

**– சகோ. V. ஆசீர்வாதம் ( திருவெற்றியூர்)**



திக்கற்ற பிள்ளைகளும்
விதவைகளும் படுகிற
உபத்திரவத்திலே
அவர்களை விசாரிக்கிறதே
மாசில்லாத சுத்தமான
பக்தி

**– யாக் 1:27**

பாடம் 4

# பதிவேட்டுச் சான்றுகள்

## Documentary Evidence

- Richard N. Ady

முதல் நூற்றாண்டில் அப்போஸ்தலர்களாலும், அவர்களுடைய உடன் ஊழியர்களாலும் தான் புதிய ஏற்பாடு எழுதப்பட்டது, இரண்டாம் மூன்றாம் நூற்றாண்டுகளில் வாழ்ந்தவர்களும், உண்மைக்கும் கட்டுக் கதைகளுக்கும் வித்தியாசங்களைக் கண்டுபிடிக்க முடியவில்லையென்று அறிக்கையிட்டவர்களுமான ஆசிரியர்களால் எழுதப்படவில்லை என்று நமக்கு எப்படித் தெரியும்?

இரண்டாவதாக, ஆரம்ப ஆசிரியர்களால் எழுதப்பட்ட மூலப் பிரதிகள் தான் இன்று நம்மிடத்தில் இருக்கிற புதிய ஏற்பாடு என்று நாம் எப்படி உறுதிப்படுத்த முடியும்? அதிலே எந்த வித கலப்படமும் நடைபெறாமலும், உண்மையைத் திரித்துக் கூறாமலும் நமக்குக் கொடுக்கப்பட்டதாக நாம் எப்படித் தெரிந்து கொள்வது? நூற்றாண்டுகளினூடே புதிய ஏற்பாட்டை மறுபடியும் நகல் எடுத்த வேதபாரகர்கள் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் எதுவும் செய்யவில்லை என்று எப்படி நாம் நிச்சயப்படுத்திக்கொள்வது? இந்தப் புத்தகங்களின் ஆரம்பக்கட்ட மூலப்பிரதிகளின் நகல்களைக் கொண்டிருந்த மக்கள் இரகசியமாக மோசமான உள்ளடி வேலைகளுக்கு துணை போகாமல் இருந்தார்கள் என்று நாம் எப்படி அறிவோம்?

இந்தப்பாடத்தில் இந்தக் கேள்விகளுக்குப் பதில் தேடுவோம்.

**‘‘வாழ்க்கை வரலாற்றுப்’’ பரிசோதனை**

அனைத்து புராதன வரலாற்றுப் பதிவேடுகளும் “வாழ்க்கை வரலாற்றுப் பரிசோதனைக்குக்’’ கட்டுப்பட்டது, நம்மிடத்தில் உள்ள நகல்கள் மூலப்பிரதிகளின் உண்மையான முகவர்கள்தானா, மாற்றங்களுக்குரியவைகளா, தவறுகள் உள்ளவைகளா, அல்லது இரகசிய ஏமாற்று வேலைகளுக்கு உட்பட்டதா என்று எப்படித் தீர்மானிக்க வேண்டும்? இந்தப் பரிசோதனையில் கேட்கப்படும் கேள்விகள் வருமாறு:

1. **‘‘கேள்விகளின் அடிப்படையில் எத்தனைநகல்கள்இருக்கின்றன?’’** எவ்வளவுக்கெவ்வளவு அதிகமான நகல் இருக்கின்றனவோ அவ்வளவுக்கவ்வளவாய் சுலபமாக ஒன்றையொன்று ஒப்பிட்டு எந்த மாற்றங்கள் இருந்தாலும் கண்டுபிடிக்க முடியும்.

2. **‘‘இந்தநகல்களைஎங்கே கண்டுபிடிக்கலாம்?** அவைகள் ஒரே இடத்தில் வைக்கப்பட்டிருந்தால், இரகசிய ஏமாற்று வேலைகளுக்கு

வாய்ப்பு உண்டு. ஆனால் அவைகள் வித்தியாசப்பட்ட, ஒன்றுக்கொன்று தொலைதூரத்தில் இருந்தால் (காலத்தாலும், இடங்களாலும் வேறுபட்ட இடங்களில் இருந்தால்) இரகசிய ஏமாற்று வேலைகள் (உள்ளடி) நடந்திருக்க வாய்ப்பில்லை.

3. **‘‘மூலப்பிரதிகளுக்கும்ஆ ரம்பகால நகல்களுக்கும்இ டையேஎ வ்வளவு காலம் கடந்து போயிருக்கக் கூடும்?’’** மூலப்பிரதி எழுதப்பட்டு நூற்றாண்டுகள் கழித்து ஆரம்ப கால நகல்கள் எழுதப்பட்டிருந்தால், மாற்றங்கள் செய்யப் பட்டிருக்கக் கூடும். எந்த அளவு இடைவெளி காலம் குறைந்துள்ளதோ அந்த அளவுக்கு குறைந்த மாற்றங்களே செய்திருக்க முடியும். **குறுகிய கால இடைவெளி பதிவு ஏடுகளின் நம்பகத் தன்மையைக் கூட்டும்.**

4. **‘‘நகல்களுக்கிடையில்க ாணப்படும் வித்தியாசங்கள் என்ன?’’** பதிவேட்டின் நகல்கள் எண்ணிறைந்த குறிப்பிடத்தக்க வித்தியாசங்களைக் கொண்டிருந்தால், ஆரம்ப ஆசிரியர் மூலப்பிரதியில் என்ன எழுதினார் என்று தீர்மானிப்பது சாத்தியமில்லை. வித்தியாசங்கள் குறைவாகவும் சிறியவைகளுமாயிருப்பின், மூலப்பிரதியின் உண்மை நகல்கள் எவையெனத் தீர்மானிப்பது சாத்தியம்.

## புதிய ஏற்பாட்டுக்கும் ‘‘வரலாற்றுப் பரிசோதனையை’’ பயன்படுத்தல்

இப்பொழுது, நாம் “வரலாற்றுப் பரிசோதனையை” புதிய ஏற்பாட்டுக்கும் பயன்படுத்தி, எப்படிப்பட்ட பதில்களைப் பெறுகிறோம் என்று காண்போம்.

1. **கிரேக்கப்பு தியஏ ற்பாட்டுந கல்கள் எத்தனை( நகல்கள்)இ ருக்கின்றன?** புராதன கிரேக்கக் கையெழுத்துப் பிரதிகள் புதிய ஏற்பாட்டின் முழுவதையுமோ அல்லது பகுதிகளையோ கொண்டதாக 5,700 நகல்கள் உள்ளன. இதோடு, இலத்தீன் மொழியில் 10,000 நகல்களும், எத்தியோப்பியா, சிலேவிக், அர்மேனியா மற்றும் பிற மொழிகளில் 9,300 நகல்களும் இருக்கின்றன. ஒட்டு மொத்தமாக, தோராயமாய், புதிய ஏற்பாட்டுக் கையெழுத்துப் பிரதிகள், ஒன்றோடு ஒன்றை ஒப்பிட்டுப் பார்க்கத்தக்கதாக 24,000 புராதன நகல்கள் உள்ளன. ஒப்பீட்டு அடிப்படையில், பிளாட்டோ மற்றும் பிளைனி எழுதிய பிரதிகள் ஏழு நகல்களும், ஏரோடோஸ் மற்றும் துசிடஸ் எழுதிய வரலாற்றுக் காவியங்கள் எட்டு நகல்களும், இராயனின் கேலிக் யுத்தங்கள் பத்து நகல்கள், டேசிசிட்டஸ்ஸின் ஏகாதிபத்திய ரோம அரசின் கால அட்டவணைக் குறிப்பேடு மற்றும் லிவி எழுதிய ரோமாபுரியின் வரலாறு இருபது நகல்களும், டெமோஸ்தனிஸின் 200

நகல்களும், ஹோமர் இல்லியாஸ் எழுதிய 643 நகல்களும் உள்ளன. மற்ற எல்லா புராதன பதிவேடுகளையும் ஒன்று சேர்த்தாலும் புதிய ஏற்பாட்டு நகல்கள் அவைகளைக் காட்டிலும் ஏராளமான அதிக நகல்களைக் கொண்டுள்ளன.

2. **புதிய ஏற்பாட்டு நகல்கள் எங்கே காணப்படுகின்றன?** அவைகள் அநேக இடங்களில் காணப்படுகின்றன: எகிப்து, கிரேக்கம், இத்தாலி, சிரியா, துருக்கி போன்ற இடங்களில் இப்படி அதிக அளவில் விநியோகிக்கப்பட்டு பரவிவரும் நகல்களில் உள்ளடி வேலை (ஏமாற்றுவேலை) நடக்குமா என்பது புராதன காலத்தில் சாத்தியமில்லாதது.

3. **பூர்வீக புதிய ஏற்பாட்டு மூலப் பிரதிகளுக்கும், நகல்களுக்குமிடையே எவ்வளவு கால இடைவெளி இருந்திருக்கக் கூடும்?** ஜான் ரைலண்டின் குற்றம் காணப்படாத பழங்கால புதிய ஏற்பாட்டுக் கையெழுத்துப் பிரதி கி.பி. 125-ல் எழுதப்பட்டதாக குறிப்பிடப்படுகிறது.



புதிய ஏற்பாடு, மிக அதிகமான கையெழுத்து பிரதிகளால் ஆதாரமளிக்கப்பட்டுள்ளது.

நிபுணர் ஒருவர் கி.பி. 100 என்று தேதியை தோராயமாய்க் குறிப்பிடுகிறார். இந்தக் கிரேக்கப்பகுதி பிரதியில் யோவான் சுவிசேஷப் புத்தகத்திலிருந்து, ஒரு சிறிய பகுதியான யோவான் 18:31-33, 37-38 ஆகியனக் காணப்படுகின்றன. (பின்வரும் படத்தைப் பார்க்கவும்)

1992-ல், டாக்டர் கார்ஸ்டென் தியேட் எனும் ஜெர்மானியர், பாப்பிரஸ் எனும் தாவரத் தாளின் கையெழுத்துப் பிரதிகளின் ஆராய்ச்சியாளர் என நன்கு அறியப்பட்டவர் (பழங்காலத்தின் பாப்பிரஸ் கையெழுத்தப் பிரதியியை கற்றவர்), ஒரு திடுக்கிடும் செய்தியை அறிவித்தார். அவர் ஐந்து பாப்பிரஸ் கையெழுத்துப் பிரதிகளில் மத்தேயு, மாற்கு, லூக்கா ஆகிய புத்தகங்களின் வேத வசனப் பகுதிகள் அடங்கியுள்ளன. இவற்றின் காலம் கி.பி. 50-68 என்று சொன்னார். தியேட் குறிப்பிட்டவைகள் உண்மையாயின், இந்த சுவிசேஷ நகல்கள் மூலப்பிரதிகள் எழுதப்பட்ட பத்தாவது ஆண்டிற்குள் (நகல்) எடுக்கப்பட்டவை.

பாப்பிரஸ் கையெழுத்துப் பிரதிகளின் துண்டுப்பகுதிகளாக 99 நகல்களில் மற்றுமொரு புதிய ஏற்பாட்டு வசனப் பகுதி காணப்படுகிறது. செஸ்டர் பியாட்டி பைப்பரி என்னும் தாள்களில், புதிய ஏற்பாடு முழுவதும் இல்லாவிட்டாலும், அதிகமான நகல்கள் கி.பி.200 வாக்கில் எழுதப்பட்டதாக கருதப்படுகிறது.


மிக முக்கியமாக, மூலப்பிரதி எழுதப்பட்டு 300, 400 வருடங்களுக்குப் பின் முழுமையாகவும், முழுமையடையும் தருவாயிலுமாகக் காணப்படும் நகல்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. கோடெக்ஸ் (புத்தகம் என்பது பொருள்) வாடிக்னாஸ் என்பது ரோமிலுள்ள வாடிக்கன் நகரில் உள்ளது, இந்தப் புத்தகம் தான் கி.பி. 325-ல் கான்ஸ்டன்டைன் சக்கரவர்த்தி கேட்டு வாங்கிய மூலப்பிரதியின் நகல்கள் என்று கருதப்படுகிறது. (படம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது)

கோடெக்ஸ் சினாய்டிகஸ், புனித கேத்ரின் துறவிகள் மடத்தில் கண்டுபிடிக்கப்பட்டது, அது சீனாய் மலையில் அடிவாரத்தில் உள்ளது. அந்த நகலில் புதிய ஏற்பாட்டின் முழுப் பகுதியும் அடங்கியுள்ளது; எழுதப்பட்ட நகலின் தேதி கி.பி. 350 (இந்த துறவுமடம் கீழேயுள்ள படத்தில் காணப்படுகிறது.)

கோடெக்ஸ் அலெக்ஸாண்ட்ரிஸ் என்பது எகிப்திலுள்ள அலெக்சாந்திரியாவில் கண்டுபிடிக்கப்ட்டது. இவைகளோடு கூட கி.பி.100-500ல் நகல் எடுக்கப்பட்ட புதிய ஏற்பாட்டின் கிரேக்கம், லத்தீன், சிலேவியன், எத்தியோப்பியா, சிரியா மற்றும் அர்மெனியன் மொழிகளில் நூற்றுக்கணக்கான நகல்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

முன்னாள் பிரிட்டிஷ் அரும்பொருட்காட்சியகத்தின் இயக்குனர் சர் ஃபிரட்ரிக் கென்யான், ''புதிய ஏற்பாட்டைப் போல மூலப்பிரதிகள் கோர்க்கப்பட்டு குறுகிய காலத்திலேயே நகல் எடுக்கப்பட்ட புத்தகம் வேறு எதுவுமில்லை என்றும் சொன்னார்.

நாம் குறிப்பிட்ட வரலாற்றுப் புத்தகங்களோடு ஒப்பிடுவோம்: ஏரோடோடஸின் வரலாற்று ஆரம்ப கால நகல் அதின் மூலப் பிரதிகளிலிருந்து 1,350 வருடங்களுக்குப் பிறகு எடுக்கப்பட்டது. தூஸ்டைடெஸின் மூல வரலாற்று நூல், எழுதப்பட்டு 1300 ஆண்டு கால இடைவெளிக்குப்பின் நகல் எடுக்கப்பட்டது. சக்கரவர்த்தி (சீஸரின் ) கேலிக் யுத்தங்கள் எழுதப்பட்டதற்கும் நகல் எடுக்கப்பட்டதுக்கிடையேயான காலம் 1000வருடம் ,



டெமோஸ்தனிஸின் புத்தகம் 1,400 ஆண்டுகளுக்குப் பின் நகல் எடுக்கப்பட்டது. டேஸிசிட்டஸின் ஏகாதிபத்திய ரோம அரசின் கால அட்டவணைக் குறிப்பேடு, 750 ஆண்டுகள், வரலாறு 950 வருடங்களுக்குப் பிறகு நகல் எடுக்கப்பட்டன. இருந்தும், இந்த வரலாறுகளெல்லாம்,ந மதுப ள்ளிக் கூடங்களில்ந ம்பகத்த ன்மையுடன் போதிக்கப்படுகின்றன.

மற்ற எந்த பதிவேடுகளையும் விட புதிய ஏற்பாடு மிக அதிகமான கையெழுத்துப் பிரதிகளால் ஆதாரமளிக்கப்பட்டுள்ளது; மூலப்பிரதியிலிருந்து நகல் எடுக்கப்பட்ட இடைவெளி காலம் குறுகிய நூற்றாண்டுகளே.

– தொடரும்



## இம்மாதக் கேள்விகள்


1. தேவன், யாருக்கு ஆயிரம் தலைமுறை மட்டும் இரக்கம் செய்கிறேன் என்கிறார்?
2. தேவனாகிய கர்த்தரிடத்தில் எப்படி அன்புகூற வேண்டும் என்கிறார், மோசே?
3. கர்த்தரில் அன்புகூறுகிறவர்கள் எதை வெறுக்கவேண்டும் என்கிறார், தாவீது?
4. தன்னிடத்தில் அன்பாக இருக்கிறவர்களிடம் இயேசு எவைகளை கைக்கொள்ள சொல்கிறார்?
5. பயத்தை எது புறம்பே தள்ளும்?
6. யாரிடம், நீ ஆதியில் கொண்ட அன்பைவிட்டாய் என குறைவு காணப்பட்டது?
7. அன்பின் உண்மையை சோதிக்கும் பொருட்டு பவுல் செய்ய சொல்வது என்ன?
8 தன்னிடத்தில் அதிக அன்பாயிருக்கிறேன் என்ற பேதுருவிற்கு, ஆண்டவர் என்ன வேலை கொடுத்தார்?
9. அன்பில்லாதவன் யாரை அறியான்?
10. நம்முடைய இருதயங்களில் எது ஊற்றப்பட்டுள்ளது என்கிறார் பவுல்?

**பதில்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 31-1-13**

## சிறுவர்க்கான கேள்விகள்



1. ஆண்டவர் இயேசுவை காட்டிகொடுத்தது யார்?
2. ஆண்டவர் இயேசுவை மறுதலித்தது யார்?
3. எந்த தோட்டத்தில் இயேசு ஜெபித்தார்?
4. இயேசுவை விசாரணை செய்த பிரதான ஆசாரியன் யார்?
5. இயேசுவை சிலுவையில் ஒப்புகொடுத்த தேசாதிபதி யார்?
6. இயேசுவின் சடலத்தை வாங்கி அடக்கம் செய்தது யார்?
7. இயேசுவின் கல்லறையில் பார்க்க வந்தவர்கள் யார்?
8. இயேசுவின் உயிர்தெழுதலை அவர்களுக்கு சொன்னது யார்?



**பதில்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 31-1-13**

அனுப்ப வேண்டிய முகவரி :

**சகோதரி. பேபி ராஜா**

45C/1, சர்ச் லேன், காரனேசன் தெரு, அரசரடி

மதுரை - 625 016 செல்: 92 4421 4421

## சென்ற மாத பதில்கள்

| | |
|---|---|
| 1. 1 யோவான் 1:10 | 6. எபி 2:9 |
| 2. 2 தீமோ 2:15 | 7. யோவா 1:18, 1 யோவா 4:12 |
| 3. ரோமர் 12:2 | 8. அப் 15:10 |
| 4. எபி 4:15 | 9. ரோம 12:2 |
| 5. யோவான் 5:26 | |

## டிசம்பர் மாதம் சிறுவர் பகுதி பதில் எழுதியவர்கள்

1. V.B. கௌஷாந்த் – திருப்பூர்
2. P. சௌந்தர் பாண்டி – திருமங்கலம்
3. D. டேஃனி ஜீனிட்டா – சென்னை
4. R. சேம் – உக்கிரங்கோட்டை
5. I. ஷீபா ப்ரியதர்ஷினி – சிவகங்கை

## டிசம்பர் மாதம் பதில் எழுதியவர்கள்

1. Mrs. மேரி ராஜ் – மதுரை
2. Mrs. ஜெமி நல்லையா – மதுரை
3. Mrs. J. கஸ்தூரி கலாவதி – மதுரை
4. Mrs. லாரா ரத்னராஜ் – தூத்துக்குடி
5. Mrs. லில்லி ஆல்பர்ட் – திருநெல்வேலி
6. P. இந்திரா பாண்டி – திருமங்கலம்
7. P. சூரிய பிரியா – திருமங்கலம்
8. G. பீற்றர் பால்ராஜ் – ஆறுமுகநேரி
9. N. ஞான சுந்தரி நாகராஜன் – கீழப்பாவூர்
10. Mrs. அன்பு சுதந்திரம் – ஏர்வாடி
11. Mrs. ரூபி வசந்தா – மதுரை
12. I. அலெக்சான்டர் ஜிப்மர் சாலமோன் – சிவகங்கை
13. J. ரேச்சல் தமிழரசி – மதுரை
14. S.M. தவமணி தேவி – திருப்பூர்
15. Dr. இவாஞ்சலின் ஜோன்ஸ் – சேலம்
16. Mrs. ஞான சுந்தரி – போத்தனூர்
17. Mrs. V. கண்ணம்மாள் – வடவள்ளி
18. M. வசந்தா கனேசரேத் – ஆம்பூர்
19. Y. ஜெயசுதா தேவசகாயம் – சென்னை
20. M. புஷ்பராணி – நாமக்கல்
21. Mrs. ஸ்டெல்லா வால்டர் – கோவை
22. Mrs. சுகந்தி ஜோன்ஸ் – திருச்சி
23. B. ஸ்டெல்லா பவுனம்பாள் – மணச்சநல்லூர்
24. C. ரேச்சல் ஜீவகாந்தி – சேலம்
25. G. சிந்தனை மலர் – ஆம்பூர்
26. R. சரோஜா – தென்கலம்
27. Sis. லிசி ராஜசேகரி – செங்கல்பட்டு
28. S. பொன் தினகரன் – மதுரை
29. Mrs. ஞானசிரோன்மணி – சமயநல்லூர்
30. S. சார்லி சந்திரன் – சென்னை
31. R. பால் ஜெயராஜ் – சென்னை
32. Mrs. ஹெலன் திலக் – மதுரை
33. திருமதி. காந்தா மனோகரன் – திருச்சி
34. K. மேரி லட்சுமி – தருமபுரி

**தொடர்ந்து இப்பகுதியில் பங்குபெறும் அனைவருக்கும் வாழ்த்துக்கள் !**